ஆண்டிமடம் ஒன்றியம், கூவத்தூர் பகுதியில் இருக்கக்கூடிய அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு பல்வேறு அடிப்படை வசதிகள் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நிச்சயமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இதுபோன்று தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்த வேண்டுமென்பதற்காக, குறிப்பாக, கூடுதல் கட்டடம், குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, சாலை வசதி, மின்சார வசதி, பாதுகாப்பு வசதி இவைகள் மட்டுமல்லாமல், தற்போது இருக்கின்ற நவீன தொழில்நுட்பங்களுடன்கூடிய தரத்திற்கு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் இந்த ஆண்டு 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு 2,877 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, நிர்மாணம் செய்ய உத்தரவிட்டிருக்கிறார்கள். அதில் ஜெயங்கொண்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கின்ற அரசு தொழிற்பயிற்சி நிலையமும் எடுக்கப்பட்டிருக்கிறது. விரைவாகப் பணிகள் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) சுருளி ஆறு மற்றும் முல்லைப் பெரியாறிலிருந்து கம்பம் தொகுதி, சின்னமனூர் ஒன்றியத்திற்கு பாசன வசதி செய்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல் (குறுக்கீடு) சொல்லுங்கள். திரு. நா. இராமகிருஷ்ணன், சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. அருண்மொழிதேவன், இருங்கள்.

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொட்டமாந்துறையில் சுருளியாறு மற்றும் முல்லைப் பெரியாற்றிலிருந்து 144 மில்லியன் கன அடி தண்ணீரை கம்பம்

*2022 மே 5]* [திரு. நா. இராமகிருஷ்ணன்]

*தொகுதி, சின்னமனூர் ஒன்றியத்திலுள்ள 8 கிராமங்களில், 34 கண்மாய்களில் தண்ணீர் வழங்குவதன் மூலமாக 2,750 கிணறுகளில் நீர் செறிவூட்டப்படுகிறது. அதனால் 10,000–க்கும் மேற்பட்ட இடங்களுக்கு பாசன வசதி, ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு, 1,25,000 டன் உணவு உற்பத்தி, 150 கோடி ரூபாய் வருவாய் தரக்கூடிய அத்திட்டத்தை நிறைவேற்றித் தருவதோடு, பதினெட்டாம் கால்வாய் மற்றும் சண்முகாநதி கால்வாய் திட்டத்தினைச் சீரமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களிடம் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், உத்தமபாளையம் பகுதியில் இருக்கிற கண்மாய்கள் மேட்டுப்பகுதியில் இருக்கின்றன. மழைக்காலங்களில் மட்டும்தான் தண்ணீர் வருகிறது; மற்ற காலங்களில் தண்ணீர் கிடைப்பதில்லை. அவற்றைப் போக்குவதற்காக, சண்முகா நதியினுடைய கால்வாய்ப் பகுதியிலிருந்து அதாவது சுருளியாற்றிலிருந்து* pump *செய்து தண்ணீரைக் கொண்டுபோய் அந்த ஏரிகளை நிரப்ப வேண்டுமென்பது இந்தத் திட்டத்தினுடைய நோக்கம். இதற்கு 56 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. 91 கோடி ரூபாய் அந்த திட்டத்திற்குச் செலவாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் செய்தால், 8 கிராமங்களில் உள்ள 34 கண்மாய்களுக்கு தண்ணீர் கிடைக்கும். அப்படிப் பெறுவதன்மூலம் 7* WRD *கண்மாய்கள், 27 ஊராட்சி கண்மாய்கள், 2,300 கிணறுகள், 636 ஆழ்துளைக் கிணறுகளெல்லாம் செறிவூட்டப்படும் என்று புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. எனவே, மொத்தமாகப் பார்த்தால், 7,250 ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. ஆகவே, இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான கோப்பு* Finance Department*–ல் இருக்கிறது. ஏற்கெனவே வந்திருக்க வேண்டும். ஆனால், தள்ளி வைத்துவிட்டார்கள். எனவே, விரைவில் அந்தத் திட்டத்திற்கான நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டு,* tender *விடப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*